சாட்சிய வாக்குமூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஷிதா)

1989 ம் ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

(வன்கொடுமை தடுப்பு) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம்.

திருவாரூர்-610 001

தேதி: 28.04.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 102/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-14 |
| சாட்சியின் பெயர் | : | குருசாமி |
| தந்தை பெயர் | : | பாண்டியன் |
| கிராமம் | : | வண்டலூர் |
| தாலுக்கா | : | செங்கல்பட்டு மாவட்டம், |
| தொழில் | : | காவல் துணை கண்காணிப்பாளர் (ஓய்வு) |
| வயது | : | 63 |

(இந்த சாட்சியம் காணொளி வாயிலாக பதிவு செய்யப்பட வேண்டுமென அரசு தரப்பில் கொடுக்கப்பட்டுள்ள வேண்டுகோள் கடிதம் ஏற்கப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சி காணொளி வாயிலாக பதிவு செய்ய முடிவு செய்யப்பட்டு அதன் படி 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 நாளாகிய இன்று சாட்சியானவர் சென்னை சிட்டி சிவில் நீதிமன்ற வளாகத்தில் அமைந்துள்ள காணொளி அறையில் முன்னிலையாகியுள்ளார். இதன் பொருட்டு சென்னை சிட்டி சிவில் நீதிமன்றத்தில் கணினி இயக்குனராக பணிபுரியும் தகுதி வாய்ந்த ஒருங்கிணைப்பாளரான பரணி அவர்கள் முன்னிலையில் இவ்வழக்கு சாட்சியின் பெயர், முகவரி மற்றும் அடையாளம் ஆகியவை சாட்சிக்கு அனுப்பப்பட்டுள்ள சாட்சிய அழைப்பாணையுடன் ஒப்பிட்டு இன்னார் என அடையாளம் காட்டினார்.

இந்த நீதிமன்றத்தில் பலகை எழுத்தர் நிலை-I ஆக பணிபுரியும் திருமதி.A.லதா அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது. இதனை தொடர்ந்து சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.)

4, 5 மற்றும் 7 எதிரிகள் ஆஜர்.1 மற்றும் 2 எதிரிகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**:

**1.** நான் காவல் துறையில் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து கடந்த 2024 ஆம் ஆண்டு பணி ஓய்வு பெற்றேன். நான் கடந்த 2011 ம் ஆண்டு திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்தபோது திருத்துறைப்பூண்டி காவல் நிலைய குற்ற எண்.655/2011-ஆக பதிவு செய்யப்பட்டுள்ள அ.சா.ஆ-5 ஆன முதல் தகவல் அறிக்கை பேரிலான வழக்கை நான் புலன் விசாரணை மேற்கொள்ள வேண்டும் என திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் கடந்த 30.06.2011 ஆம் தேதி அன்று அலுவலக செயல் உத்தரவு பிறப்பித்திருந்தார். அந்த உத்தரவு நகல் **அ.சா.ஆ-9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அ.சா.ஆ-9 ஆன உத்தரவின் அடிப்படையில் இவ்வழக்கினை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 30.06.2011 ஆம் தேதி மாலை 6.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் அ.சா-8 அண்ணாதுரை மற்றும் அ.சா-9 சிவானந்தம் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் ஒன்றும், மாதிரி வரைடம் ஒன்றும் தாயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ-10** ஆகவும், மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.11** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**2.** பின்னர் இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட அ.சா-1 கார்த்திகேயன் என்பவரையும், சம்பவத்தை கண்ணில் பார்த்த சாட்சிகளான அ.சா-2 தனபால், என்பவரையும், மேலும் சம்பவத்தில் காயம் அடைந்த அ.சா-4 ரவி,

அ.சா-7 லெட்சுமணன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளான அ.சா-5 ஆறுமுகம், அ.சா-6 துரை ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சம்பவத்தில் காயம் அடைந்த நபர்களை மருத்துவமனைக்கு அழைத்துச்சென்ற அ.சா-3 மகேஷ் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

**3.** இவ்வழக்கின் எதிரிகளை பல்வேறு இடங்களில் தேடிவந்தபோது 1ம் எதிரி சரவணகுமார், 2ம் எதிரி கார்த்திகேயன், 3ம் எதிரி திலகராஜ், 4ம் எதிரி ஞானவேல், 5ம் எதிரி சுரேஷ்குமார், 7ம் எதிரி சுப்பிரமணியன் ஆகியோர்களை பள்ளங்கோவில் பேருந்து நிறுத்தம் அருகே மாலை 6.30 மணியளவில் எதிரிகளை கைது செய்தேன். அப்போது 1ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் ரமேஷ் மற்றும் கர்ணன் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். அப்போது 1ம் எதிரியிடமிருந்து ஸ்கார்பியோ கார் TN02Y5937 கைப்பற்றினேன். அது **சா.பொ-1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. டாடா இன்டிகோ கார் TN50B1019 சந்தன கலர் மெட்டாலிக் கைப்பற்றினேன். அது **சா.பொ-2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சுமார் 24 செ.மீ நீளமுள்ள ஸ்டெய்ன்லெஸ் ஸ்டீல் கத்தி-1 கைப்பற்றினேன். அது **சா.பொ-3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சுமார் 58 செ.மீ நீளமுள்ள இரும்பு ராடு -1 (இரத்தம் தோய்ந்துள்ளது) கைப்பற்றினேன். அது **சா.பொ-4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சுமார் 85 செ.மீ நீளமும் 12 செ.மீ மர கைப்பிடி கொண்ட அரிவாள்-1 (அதில் பித்தளை பூன் 3 செ.மீ, இதில் இரும்பு பாகம் மொத்த நீளம் சுமார் 70 செ.மீ) கைப்பற்றினேன். அது **சா.பொ-5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சுமார் 77 செ.மீ நீளமுள்ள அரிவாள்-1 (இதில் மர கைப்பிடி 12 செ.மீ, பூன் 2 செ.மீ, இரும்பு பாகம் சுமார் 63 செ.மீ) கைப்பற்றினேன். அது **சா.பொ-6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்சொன்ன சா.பொ-1 முதல் சா.பொ-6 வரையான பொருட்களை கைப்பற்றும் போது மேற்சொன்ன சாட்சிகள் முன்னிலையில் மகஜர் ஒன்று

தயார் செய்தேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ-12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி பொருட்களை படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91- **அ.சா.ஆ-13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் எதிரிகளை தக்க வழி காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன்.

**4.** இவ்வழக்கின் மீதமுள்ள 3 குற்றவாளிகளை கைது செய்ய தனி படை அமைத்தேன். மேலும் இவ்வழக்கில் காயம் பட்ட அ.சா-1 கார்த்திகேயன், அ.சா-4 ரவி ஆகியோர்களுக்கு காயச்சான்றிதழ் திருத்துறைப்பூண்டி அரசு மருத்துமனையில் அ.சா-13 மருத்துவர் சிவஞானம் என்பவரிடம் அ.சா.ஆ-6 மற்றும் 7 ஆன விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் பெற்றேன். மேலும் இவ்வழக்கில் காயம் அடைந்த அ.சா-7 லெட்சுமணன் என்பவருக்கு மருத்துவமனையிலிருந்து அ.சா.ஆ-8 ஆன விபத்து பதிவேடு பெற்றேன். அவர் மருத்துமனையிலிருந்து தன்னிச்சையாக வெளியே சென்றுவிட்டதால் காயச்சான்றிதழ் பெறமுடியவில்லை.

**5.** இவ்வழக்கின் அ.சா-1 கார்த்திகேயன் என்பவருக்கு சாதி சான்றிதழ் வேண்டு திருத்துறைப்பூண்டி வட்டாட்சியர் அலுவகத்திற்க வேண்டுகோள் கடிதம் கொடுத்து அதன் அடிப்படையில் இவர் இந்து பள்ளர் சமூகத்தை சேர்ந்தவர் என்பதற்கான சாதி சான்றிதழ் பெற்றேன். அந்த சாதி சான்றிதழ் **அ.சா.ஆ-14** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் எதிரிகளுக்கு சாதி சான்றிதழ் வேண்டு கீழ்வேளூர் வட்டாட்சியர் அலுவகத்திற்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அதன் அடிப்படையில் 1ம் எதிரி இந்து கள்ளர் சமூகத்தை சேர்ந்தவர் என்பதற்கான சாதி சான்றிதழ் பெற்றேன். அந்த சாதி சான்றிதழ் **அ.சா.ஆ-15** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2ம் எதிரி கார்த்திகேயன் இவர் இந்து கள்ளர் சமூகத்தை சேர்ந்தவர் என்பதற்கான சாதி சான்றிதழ் பெற்றேன். அந்த சாதி சான்றிதழ் **அ.சா.ஆ-16** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 3ம் எதிரி திலக்ராஜ் என்பவருக்கு சாதி சான்றிதழ்

வேண்டு மன்னார்குடி வட்டாட்சியர் அலுவகத்திற்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அதன் அடிப்படையில் 3ம் எதிரி இந்து அகமுடையார் சமூகத்தை சேர்ந்தவர் என்பதற்கான சாதி சான்றிதழ் பெற்றேன். அந்த சாதி சான்றிதழ் **அ.சா.ஆ-17** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 4ம் எதிரி ஞானவேல் என்பவருக்கு சாதி சான்றிதழ் வேண்டு திருத்துறைப்பூண்டி வட்டாட்சியர் அலுவகத்திற்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அதன் அடிப்படையில் 4ம் எதிரி இந்து கள்ளர் சமூகத்தை சேர்ந்தவர் என்பதற்கான சாதி சான்றிதழ் பெற்றேன். அந்த சாதி சான்றிதழ் **அ.சா.ஆ-18** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 5ம் எதிரி சுரேஷ் என்பவருக்கு சாதி சான்றிதழ் வேண்டு மன்னார்குடி வட்டாட்சியர் அலுவகத்திற்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அதன் அடிப்படையில் 4ம் எதிரி இந்து அகமுடையார் சமூகத்தை சேர்ந்தவர் என்பதற்கான சாதி சான்றிதழ் பெற்றேன். அந்த சாதி சான்றிதழ் **அ.சா.ஆ-19** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 6ம் எதிரி சத்தியமூர்த்தி என்பவருக்கு சாதி சான்றிதழ் வேண்டு நீடாமங்கலம் வட்டாட்சியர் அலுவகத்திற்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அதன் அடிப்படையில் 6ம் எதிரி இந்து கள்ளர் சமூகத்தை சேர்ந்தவர் என்பதற்கான சாதி சான்றிதழ் பெற்றேன். அந்த சாதி சான்றிதழ் **அ.சா.ஆ-20** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 7ம் எதிரி R.M.சுப்பிரமணியன் என்பவருக்கு சாதி சான்றிதழ் வேண்டு திருத்துறைப்பூண்டி வட்டாட்சியர் அலுவகத்திற்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அதன் அடிப்படையில் 7ம் எதிரி இந்து அகமுடையார் சமூகத்தை சேர்ந்தவர் என்பதற்கான சாதி சான்றிதழ் பெற்றேன். அந்த சாதி சான்றிதழ் **அ.சா.ஆ-21** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**6.** பின்னர் இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அ.சா12 ஆனந்தகிருஷ்ணன் என்பவரை விசாரணை செய்தேன். பின்னர் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது கடந்த 05.11.2011 ஆம் தேதி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**7.** மேலும் அ.சா-4 ரவி, அ.சா-5 ஆறுமுகம், அ.சா-6 துரை, அ.சா-7 லெட்சுமணன் மற்றும் அ.சா-10 ரமேஷ் ஆகியோர்கள் என்னிடம் சாட்சியம் அளித்துள்ளார்கள் அதை தான் நான் வாக்குமூலமாக பதிவு செய்துள்ளேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

**1.** சம்பவ இடமானது காவல் நிலையம் முன்பு என்பதை ஊர்ஜிதம் செய்ய இரத்தம் தோய்ந்த மண், இரத்தம் தோயாத மண் எடுத்து ஊர்ஜிதம் செய்யப்பட்டதா என்றால் இல்லை. காவல் நிலையம் முன்பு எந்த குற்ற சம்பவமும் நடைபெறவில்லை என்பதால் மேற்கண்ட முறையில் புலன் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. காயம் அடைந்ததாக சொல்லப்படும் நபர்களின் இரத்தக்கரை படிந்த சட்டை மற்றும் உடைகளை பார்த்து அதை கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்யவில்லை. கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் ஆயுதங்களை முன்வைத்து மருத்துவரிடம் மேற்கண்ட ஆயுதங்களினால் தாக்கினால் அ.சா-1 கார்த்திகேயன், அ.சா-4 ரவி மற்றும் அ.சா-7 லெட்சுமணன் ஆகியோருக்கு காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என கேட்டு விளக்கம் பெற்றுள்ளேனா என்றால் விளக்கம் பெறவில்லை. ஆனால் சாதாரண காயம் என கூறியுள்ளார்.

**2.** அ.சா-1 கார்த்திகேயன் என்பவர் தனது வாகனத்திலிருந்து இறங்கும் போது கூர்மையான இரும்பு பகுதி மோதியதால் காயம் ஏற்பட்டுள்ளது என்பதால் தான் மருத்துவரிடம் தனியாக விளக்கம் எதுவும் பெறவிலலை என்றால் சரியல்ல. வழக்கில் முன் வைக்கப்பட்டுள்ள ஆயுதங்களால் காயம் அடைந்த நபர்கள் தாக்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த ஆயுதங்கள் அனைத்தும் இந்த வழக்கிற்காக என்னால் தயார் செய்யப்பட்டு என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கின் சா.பொ-1, 2, 3, 5 மற்றும் 6 ஆகியவைகளில் இரத்த கறை கிடையாது என்றால் சரிதான். சா.பொ-4 ல் உள்ள இரத்தம் தோய்ந்துள்ளது என முதல் விசாரணையில் சொல்லியுள்ள விபரம் குறித்து அந்த இரத்தம்

மனித இரத்தமா அல்லது விலங்கு இரத்தமா என்பது குறித்து அறிய தடைய அறிவியல் பதிசோதனைக்கு அனுப்பி ஆய்வு அறிக்கை எதுவும் இந்த வழக்கில் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சா.பொ-4 ல் எந்த இரத்த கரையும் கிடையாது வழக்கிற்காக பொய்யா சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**3.** அ.சா-1 கார்த்திகேயன் எனது விசாரணையின் போது 1ம் எதிரி உபயோகப்படுத்தியதாக சொல்லப்படும் தர குறைவான வார்த்தைகளால் அதிர்ச்சி, அவமானம் அடைந்ததாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. 7ம் எதிரி சாதியை பற்றி தர குறைவாக பேசி வெட்டுங்கடா என்று சொன்ன பின்பு தான் அ.சா-1 கார்த்திகேயன் தாக்கப்பட்டதாக போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. தங்களது விசாரணையின் போது ஞானராஜ் என்ற பெயர் உள்ள நபர் அ.சா-1 கார்த்திகேயனை தாக்கியதாக போலீசார் விசாரணையில் கூறவில்லை என்றால் சொல்லவில்லை. 5ம் எதிரி சுரேஷ் அ.சா-1யை இரும்பு கம்பியால் தாக்கி வலது, இடது கைகளில் காயம் ஏற்பட்டதாக போலீசார் விசாரணையில் கூறிவில்லை என்றால் சரியல்ல. அரசு தரப்பு சாட்சிகள் வசம் அ.சா-1 முதல்அ.சா-10 வரையான சாட்சிகளிடம் 2 முதல் 6 வரையிலான எதிரிகள் சம்பவத்திற்கு முன்பு தெரிந்த நபர்களா என கேட்டு விளக்கம் எதுவும் பெற்றிருக்கிறேனா என்றால் தனியாக எதுவும் விளக்கம் பெறவில்லை, முதல் தகவல் அறிக்கையில் கூறியுள்ளார்கள். 2 முதல் 6 எதிரிகள் அ.சா-1 கார்த்திகேயன், அ.சா-2 தனபால், அ.சா-4 ரவி, அ.சா-7 லெட்சுமணன் ஆகியோர்களுக்கு முன் பின் தெரியாதவர்கள் அடையாள அணிவகுப்பு நடத்தி ஊர்ஜிதம் செய்யவேண்டிய பொறுப்பிலிருந்து தவிர்த்து கொள்ள ஏற்கனவே அடையாளம் தெரிந்தவர்கள் போல் வாக்குமூலங்கள் ஜோடிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அ.சா-2 தனபால் காவல் நிலையத்திற்குள் புகார் எழுதிக்கொண்டிருக்கும் போது 7ம் எதிரி சுப்பிரமணியன் காவல் நிலையத்திற்குள் வந்து எதுவும் தர குறைவாக பேசி

சண்டையிட்டார் என கூறப்படவில்லை என்றால் சரிதான். தங்கள் விசாரணையின் போது வாகனங்களிலிருந்து அரிவாள், கை துப்பாக்கி முதலியவை கைப்பற்றப்பட்டதாக வழக்கு கோப்புகளில் கிடையாது என்றால் அரிவாள் கைப்பற்றப்பட்டதாக உள்ளது ஆனால் கை துப்பாக்கி இல்லை. வாகனங்களிலிருந்து அரிவாள் கைப்பற்றப்படவில்லை வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**4.** அ.சா-4 ரவி மீதுள்ள காயத்திற்கு விளக்கம் ஏற்படுத்தவேண்டி தாங்கள் தங்கள் விசாரணையில் திலகராஜ் என்பவர் கத்தியால் தாக்கி ரவிக்கு கட்டை விரலில் காயம் ஏற்பட்டதாக வாக்குமூலத்தை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அ.சா-7 லெட்சுமணன் வாக்குமூலம் எதிரிகளை தொடர்பு படுத்தி பொய்யாக ஜோடித்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் திருத்துறைப்பூண்டி காவல் நிலையத்தின் முன்பு சட்ட விரோதமாக ஆயுதங்களுடன் ஒன்று கூடவில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிரி ஆறு சரவணன், 7ம் எதிரி சுப்பிரமணியன் ஆகியோர் அ.சா-1 கார்த்திகேயனை சாதி பற்றி தர குறைவாக பிறர் பார்க்கும் படியும், கேட்கும் படியும் பேசவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் கொலை செய்ய வேண்டும் என்ற உட்கருத்துடன் தாக்கவில்லை என்றால் சரியல்ல. அ.சா-1 கார்த்திகேயனின் சொந்த ஊரான மங்கலநாயகிபுரத்தில் ஏற்பட்ட பிரச்சனையின் பின் தொடர்ச்சியாக எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் வாகனங்கள் பயன்படுத்தப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் சொன்ன நேரம், சொன்ன தேதி, சொன்ன இடத்தில் எதிரிகள் கைது செய்யப்படவில்லை, அதன் அடிப்படையில் அவர்களிடமிருந்து எந்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் ஆயுதங்களும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. விசாரணை என்ற பெயரில் எதிரிகளை வீட்டிலிருந்து

காவல் நிலையம் அழைத்து வந்து அவர்களை மிரட்டி அவர்களிடமிருந்து வெற்று காகிதங்களில் கையொப்பம் பெற்று ஆவணங்கள் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஒருதலை பட்சமாக புலன் விசாரணை செய்து எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கால் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

(சாட்சியம் முடிந்த பின்னர் பதிவு செய்யப்பட்ட முதல் மற்றும் குறுக்கு விசாரணை வாக்குமூலம் அச்சு நகல் செய்யப்பட்டு மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டு மறுமுனையில் சென்னை சிட்டி சிவில் நீதிமன்றதில் கணினி இயக்குனராக பணிபுரியும் தகுதி வாய்ந்த ஒருங்கிணைப்பாளரான பரணி அவர்களால் பதிவிறக்கம் செய்யப்பட்டு பிரிண்ட அவுட் எடுக்கப்பட்டு சாட்சியின் கையொப்பம் பெறப்பட்டு, இந்நீதிமன்றத்திற்கு பின்னர் தபாலில் அனுப்பி வைக்க உத்தரவிடப்பட்டது. இவற்றிற்கு ஆதரவாக, ஒருங்ணைப்பாளரும் கையொப்பம் செய்து அனுப்பி வைக்க உத்தரவிடப்பட்டது.)

இன்று 28.04.2026 மறுமுனையில் அங்கீகரிக்கதக்க ஒருங்கிணைப்பாளர் உதவியுடன் என் முன்னிலையில் காணொலி காட்சி மூலம் சாட்சி ஆஜராகி, சாட்சியம் சொல்ல சொல்ல கணினி தட்டச்சு மூலம் பதிவு செய்யப்பட்டு, முழு சாட்சியம் அடங்கிய PDF File சாட்சிக்கு அவர் ஆஜராகியுள்ள மறுமுனைக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட்டு, மறுமுனையில் அதை ஒருங்கிணைப்பாளர் பதிவிறக்கம் செய்து பிரிண்ட் அவுட் எடுத்து, அதனை சாட்சி படித்துப்பார்த்து, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, மறுமுனை ஒருங்கிணைப்பாளர் முன்னிலையில் கையொப்பம் செய்தும், பின்னர் இந்நீதிமன்றத்திற்கு தபால் மூலமாக அவற்றை அனுப்பி வைக்க உத்தரவிடப்பட்டது. அவ்வாறே அசல் சாட்சிய வாக்குமூலம் இந்நீதிமன்றத்தில் பிரிண்ட் அவுட் எடுக்கப்பட்டு என்னால், கையொப்பம் செய்யப்பட்டது.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.04.28 14:43:53 +0530

அமர்வு நீதிபதி,
பட்டியல் வகுப்பினர் மற்றும்
பழங்குடியினருக்கான (வன்கொடுமை தடுப்பு)
வழக்குகளை விசாரிப்பதற்கான
சிறப்பு நீதிமன்றம்,
திருவாரூர்.